1981 ஏப்ரல் 4]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, ஏற்கெனவே அரிசன கூட்டுறவு பால் சங்கங்களுக்கு போதுமான கடன்கள் கூட்டுறவு வங்கிகளிலே இருந்து கொடுக்கப்படுவது கிடையாது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருந்துதான் கடன் தரப் பட வேண்டிய நிலைமை இருக்கின்றது. அந்த வங்கிகள் ஆதி திராவிட மக்களுக்குக் கடன் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். அதை நிவர்த்திக்க அரசாங்கம் ஏதாவது முயற்சி செய்யுமா? அல் லது அவ்வாறு கொடுக்கப்படுகின்ற கடனுக்கு அரசாங்கம் கேரண்டி கொடுத்தால் அந்த வங்கிகள் கடன் கொடுப்பதற்குரிய வாய்ப்பு இருக்கும். மேலும் ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் தனித் தனியாக கூட்டுறவு பால் சங்கத்தை ஆரம்பிக்க அரசு முயற் சிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி பரமக்குடி தாலுக்கா மென்னந்தி-நாகாச்சி கூட்டுறவு பால் சங்கம் செயல்படாமல் இருப்பது குறித்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வேறு விவரங்கள் தேவை என்றால், தனிக் கேள்வி போட்டால் பதில் சேகரித்துக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு பால் சொசைட்டிகளின் மூலம் லோன் கிடைப்ப தில்லை. அதற்கு ஏதாவது மாற்று ஏற்பாடு அரசு செய்யுமா என்று நான் பொதுவாகத்தானே கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேட்பது கொள்கை யைப் பொருத்தது. அதனால் தனிக் கேள்வியே போட வேண்டும்.

Quality control methods in Tamil Nadu Dairy Development Corporation.

*Q. No. 633— Thiru N. KITTAPPA: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(a) Whether quality control methods are adopted by Tamil Nadu Dairy Development Corporation; and

(b) If so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) பால் கூட்டுறவுச் சங்கங்களில் பாலை வாங்கும்போது பரிசோதனை செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது. பால் குளிரூட்டும் நிலையத்தில் பாலைப் பெறும்பொழுது ஒவ்வொரு பாத்திரத்திலுள்ள பாலின் மாதிரிகள் எடுக்கப்பட்டு அதில்

உள்ள கொழுப்புச் சத்தும், புரதச் சத்தும் பரிசோதிக்கப் படுகிறது. குளிரூட்டும் நிலையத்திலிருந்து மத்திய பண்ணைக்கு அனுப்பப்படும்பொழுது பாலின மாதிரி எடுக்கப் பட்டு பரிசோதிக்கப்படுகிறது. பால் பண்ணையில் பெறப் படும்போது மீண்டும் பாலை பரிசோதிக்கிறார்கள். அங்கிருந்து பாலை வெளியே கொண்டு செல்லும்போது பரிசோதிக்கிறார்கள். பால் விநியோகிக்கும் இடங்களிலும் மாதிரி பால் எடுக்கப்பட்டு அதன் தரம் பரிசோதிக்கப்படுகிறது. ஆக இவ்வாறு பால் கையாளப்படும் எல்லா இடங்களிலும் பாலின் தரக்கட்டுப்பாடு பரிசோதனையை பால்வள நிறுவனம் செய்கிறது.

திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் கூட்டுறவுச் சங்கங்களில் பாலை வாங்கும் போது பேட்—கொழுப்புச் சத்து, எஸ்.என்.எப். எனப்படும் புரதச்சத்து போன்றவைகள் பரிசோதிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். சில்லிங் செண்டருக்கு (குளிரூட்டும் நிலையம்) பாலை எடுத்துக் கொண்டு செல்லும்போது சேம்பிளை கொடுத்துவிட்டு, அதற்குப் பிறகு செண்டருக்கு எடுத்துச் சென்று விநியோகிக்கும் முன் பேட்—எஸ்.என்.எப். போன்றவைகளை பரிசோதனை செய்தால் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால், சென்டரில் பல இடங்களிலிருந்து பாலைக் கொண்டு வந்து ஒன்றாகச் சேர்த்து பிறகு விநியோகம் செய்கிறார்கள். எனவே முதலில் சேம்பிளை பெற்று விட்டு, பிறகு செண்டர் பிளேசில் இவைகளைப் பரிசோதனை செய்தால் நலமாக இருக்கும். அப்படிச் செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள நடைமுறைப்படி எல்லா இடங்களிலும் பாலின் தரக்கட்டுப்பாடு பரிசோதனையை பால்வள நிறுவனம் செய்கிறது என்று எனக்குக் குறிப்பு கொடுக்கப் பட்டுள்ளது. ஏதாவது சில இடங்களில் அவ்வாறு இல்லாமல் இருந்தால், அந்த இடங்களைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் அங்கேயும் இந்த முறைகளை நடைமுறைப்படுத்து ஏற்பாடு செய்யப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வள நிறுவனம் தரக் கட்டுப்பாடு முறைகளைக் கடைப்பிடிக்கும்போது கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பெறப் படும் பாலில் கொழுப்புச் சத்து, புரதச் சத்து போன்றவைகளை அறிய சில டெஸ்டுகளைச் செய்கிறார்கள். அப்படி அந்த டெஸ்டுகளில் கொழுப்பு, புரதம் போன்ற கண்டெண்ட்ஸ் லில் வரக்கூடிய அளவுகள் மிகப் பெரிய அளவில் வித்தியாசப் படுகின்றன அதுமட்டும் அல்லாமல் லிட்டருக்கு 2.20 பைசா என்று வெளியே விற்கிற பால், இங்கே லிட்டருக்கு 1.20 பைசா

கூட கிடைக்க மாட்டேன் என்கிறது. அதற்குக் காரணம், இந்த டெஸ்டுகளை பல முறைகளிலே எடுத்துக் கொண்டு, குறைத்துப் போட்டு தருவதினால்தான், அதை தடுப்பதற்கு ஆங்காங்கே உள்ள கூட்டுறவு சங்கங்களிலேயே டெஸ்டுகள் செய்து, பேட்—கொழுப்புச் சத்துக்களின் கண்டென்ட்ஸ்களின் அடிப்படையிலேயே விலையை தருவதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஆலோசனையின் அடிப்படையில்தான் இப்பொழுதும் விலை கொடுக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரிலே சில இடங்களிலே பாலிதின் ரேப்பர் பாக்கெட்டுகளில் பால் விநியோகம் செய்யப் படுகிறது. அது தரமாக இருக்கிறது. அதுபோலவே எல்லா இடங்களிலும் கொண்டு வருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : படிப்படியாக அந்த முறை மேற்கொள்ளப் பெற்று வருகிறது.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : பால் தரக் கட்டுப்பாடு என்று குறிப்பிட்டு அதிலே வழங்கப்படுகிற பாலில் அதிகமான பால் பவுடரைக் கலப்பதால் பாலின் தரம் குறைந்துவிடுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணம் பரிசீலிக்கப்படும்.

திரு. செ. சிவசாமி : தரக்கட்டுப்பாட்டில் பாலில் கொழுப்புச் சத்து எவ்வளவு இருக்கிறது என்பதைப் பற்றிச் சொன்னார்கள். பாலில் அதிகப்படியாக கொழுப்புச் சத்து எவ்வளவு இருக்கிறது? குறைந்தபட்சம் கொழுப்புச் சத்து எவ்வளவு இருக்கிறது ? இந்த ஸ்டான்டர்டைஸ்ட் செய்த பாலில் எவ்வளவு கொழுப்பு சத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : ஒவ்வொரு இடத்திலும் இடத்தைப் பொறுத்து கொழுப்புச் சத்து, புரதச் சத்து இவை வித்தியாசப்படுகிறது. அது அந்தந்த இடத்தில் கிடைக்கும் பாலின் தரத்தைப் பொறுத்திருக்கிறது.